தின கனி காலை நாளிதழ்

admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்



மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை

Call : 044-22772060 9443699066






| Vol: 03 | Issue: 229 | 4 Pages | 27.06.2026 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 229 | 4 பக்கங்கள் | 27.06.2026 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்**
**வன்மையு ளெல்லாந் தலை**

**விளக்கம்:**
**தம்மைவிட (அறிவு முதலியவற்றால் ) பெரியவர் தமக்குச் சுற்றத்தராகுமாறு நடத்தல், வல்லமை எல்லாவற்றிலும் சிறந்ததாகும்.**

## அதிவேக சூப்பர் கம்ப்யூட்டர்கள்.. அமெரிக்காவை பின்னுக்கு தள்ளி முதலிடத்தில் சீனா



சென்னை, ஜூன் 27

அதிவேக சூப்பர் கம்ப்யூட்டர்கள் பட்டியலில் அமெரிக்காவை பின்னுக்கு தள்ளி சீனாவின் 'லைன்ஷைன்' என்ற கம்ப்யூட்டர் முதலிடத்தை பிடித்துள்ளது.

அதிவேக சூப்பர் கம்ப்யூட்டர்கள் தரவரிசைப் பட்டியல் ஆண்டுக்கு 2 முறை மிகவும் துல்லியமாக வெளியிடப்பட்டு வருகிறது. சூப்பர் கம்ப்யூட்டிங் துறையில் உலகப் புகழ்பெற்ற பேராசிரியர்கள் மற்றும் கணினி வல்லுனர்கள் அடங்கிய "டாப்500" என்ற அமைப்பை சேர்ந்த குழு இந்த பட்டியலை வெளியிடுகிறது.

உலகின் பல நாடுகளில் உள்ள நிறுவனங்கள் தங்களின் சூப்பர் கம்ப்யூட்டர்களின் வேகத்தைச் சோதித்து இந்த அமைப்புக்கு தரவுகளை அனுப்புவார்கள். அதை ஆய்வு செய்து இந்த அமைப்பு பட்டியலை தயாரிக்கும்.

கடந்த 1993ம் ஆண்டில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மற்றும் நவம்பர் மாதங்களில் இந்த தரவரிசைப்பட்டியல் புதுப்பிக்கப்பட்டு அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படுகிறது. உலக நாடுகளுக்கு இடையே சூப்பர் கம்ப்யூட்டர் தொழில்நுட்பத்தில் உள்ள போட்டி மற்றும் அசுர வளர்ச்சியைத் துல்லியமாக இந்த அமைப்பு 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஆவணப்படுத்தி வருகிறது.

அதன்படி, நடப்பாண்டில் ஜூன் மாதத்துக்கான அதிவேக சூப்பர் கம்ப்யூட்டர்கள் தரவரிசை பட்டியலை ஜெர்மனியில் நடைபெற்ற சர்வதேச சூப்பர் கம்ப்யூட்டிங் மாநாட்டில் வெளியிட்டு இருக்கின்றனர்.

இதில் சீனாவின் ஷென்சென் நகரில் உள்ள தேசிய சூப்பர் கம்ப்யூட்டிங் மையத்தில் நிறுவப்பட்டிருக்கும் 'லைன்ஷைன்' என்ற கம்ப்யூட்டர் முதலிடத்தை பெற்றிருக்கிறது. இது வினாடிக்கு 2 குவின்டில்லியனுக்கு அதிகமான வேகத்தில் கணக்கீடுகள் செய்துள்ளது.

இதுவரை உலகின் அதிவேக கம்ப்யூட்டராக முதலிடத்தில் இருந்த அமெரிக்காவின் "எல் கேபிடன்" என்ற கம்ப்யூட்டரை விட இது 20 சதவீதம் கூடுதல் வேகம் கொண்டது ஆகும். அது இப்போது 2வது இடத்துக்கு தள்ளப்பட்டிருக்கிறது. இதன் மூலம் 2017ம் ஆண்டுக்கு பிறகு சீனா இந்த பட்டியலில் மீண்டும் முதலிடத்தை பெற்றிருக்கிறது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா விதித்த கடுமையான தொழில்நுட்பத் தடைகளை மீறி சீனா இந்தச் சாதனையைச் செய்துள்ளதுதான் உலக அரங்கில் வியப்பாகப் பார்க்கப்படுகிறது. சீனா இந்த கம்ப்யூட்டரை முழுக்க முழுக்க உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட இயங்குதளத்தில் இயக்கியுள்ளது.

'லைன் ஷைன்' கம்ப்யூட்டர் பொதுவான அறிவியல் மற்றும் என்ஜினீயரிங் கணக்கீடுகளில் அதிவேகமாகச் செயல்பட்டாலும், செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ) சார்ந்த பணிகளுக்கான சோதனையில் இது உலகளவில் 4வது இடத்தில் தான் உள்ளது.

## சிங்கப்பூர் கொடி ஏந்தியக் கப்பலை ஈரான் ராணுவம் தாக்கியதால் பரபரப்பு



ஈரான், ஜூன் 27

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே தற்காலிக அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது. மேலும் நிரந்தர அமைதி ஒப்பந்தம் மேற்கொள்ள இருதரப்பும் 60 நாட்களுக்கு காலக்கெடு நிர்ணயித்து ஆராய்ந்து வருகிறது. தற்காலிக ஒப்பந்தம் கையெழுத்துக்கு பிறகு ஹார்முஸ் நீரிணையை வணிகக் கப்பல்கள் கடந்து வருகின்றன.

இந்த நிலையில், ஹார்முஸ் நீரிணையை கடக்க முயன்ற சிங்கப்பூர் கொடி ஏந்திய 'எவர் வல்லி' என்ற கப்பலை ஈரான் ராணுவம் தாக்கியுள்ளது. ஓமனின் தாஹிதித் துறைமுகத்திலிருந்து 7.5 கடல் மைல் தென்கிழக்கில், கப்பலின் வலது புறத்தில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் கப்பலின் மேல்தளம் சேதமடைந்ததாகவும், உயிரிழப்புகள் ஏதும் இல்லை எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

ஆளில்லா விமானம் மூலம் இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. தாங்கள் அங்கீகரித்த வழித்தடத்தை மட்டுமே கப்பல்கள் பயன்படுத்த வேண்டும் என ஈரான் எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில் இந்த தாக்குதல் நடந்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதனால் ஹார்முஸ் நீரிணையை கடக்காமல் பல்வேறு கப்பல்கள் பின்வாங்கியுள்ளன.

## கென்யா தலைநகரில் ராணுவத்தினர் குவிப்பு



நைரோபி, ஜூன் 27

கென்யாவில் கடந்த 2024ம் ஆண்டு கூடுதல் வரி விதிப்புக்கு எதிராக 'ஜென்சி' இளைஞர்கள் நடத்திய வரலாற்றுச் சிறப்புமிக்க போராட்டத்தின் போது, துப்பாக்கிச் சூட்டில் 120க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். அவர்களின் நினைவாக நீதி கேட்கவும், விலைவாசி உயர்வைக் கண்டித்தும் சமூக வலைத்தளங்கள் மூலம் இளைஞர்கள் மீண்டும் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்த பிரம்மாண்ட போராட்டத்தை ஒட்டி, தலைநகர் நைரோபியின் முக்கியச் சாலைகள் அனைத்தையும் போலீசார் முற்றிலும் முடக்கி 'சீல்' வைத்துள்ளனர். திக்கா மொம்பாசா உள்ளிட்ட நெடுஞ்சாலைகளில் ஆயுதம் ஏந்திய போலீசார் சோதனைச் சாவடிகளை அமைத்துள்ளனர்.

நாடாளுமன்றம் மற்றும் அதிபர் மாளிகையைச் சுற்றி முள்கம்பி வேலிகளுடன் கலவரத்தடுப்புப்படைகள், ராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளன. பொதுப் போக்குவரத்து முற்றிலும் முடங்கியுள்ளதால், ஆயிரக்கணக்கானபொதுமக்கள் நீண்ட தூரம் நடந்து செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

# போலியோ சொட்டுமருந்து முகாம்; சென்னை பாலவாக்கத்தில் முதல்வர் விஜய் வைக்கிறார்



சென்னை, ஜூன் 27

போலியோசொட்டுமருந்துமுகாமை சென்னை பாலவாக்கத்தில் முதல் அமைச்சர்விஜய்தொடங்கிவைக்கிறார்.

போலியோ சொட்டு மருந்து முகாம் நாளை மறுதினம் தமிழகம் முழுவதும் நடைபெறஉள்ளது.தமிழகத்தில்உள்ள அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள், பள்ளிகள் மற்றும் மக்கள் கூடும் முக்கியமான பொது இடங்கள் என மொத்தம்43ஆயிரத்து 51 மையங்களில் போலியோ சொட்டு மருத்து வழங்கப்படுகிறது.

இந்த மையங்களில் 5 வயதிற்குட்பட்ட 50 லட்சத்திற்கும் அதிகமான குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழகத்தில் நாளை மறுதினம்நடைபெறஉள்ளபோலியோ சொட்டு மருந்து முகாமை முதல் அமைச்சர்விஜய்தொடங்கிவைக்கிறார்.

அவர் சென்னை பாலவாக்கத்தில் உள்ள அரசு ஆதி திராவிடர் பள்ளியில் நாளை மறுதினம் காலை 8 மணிக்கு போலியோ சொட்டு மருந்து முகாமை தொடங்கி வைக்கிறார்.

## தணிகை கோயில் உண்டியல்கள் நிரம்பியது ரூ.1.61 கோடி வசூல்



உலக அளவில் மாற்றப்படும் திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோவிலுக்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள்பக்திபரவசத்துடன்வருகை தந்து மலைக் கோயிலில் வைக்கப்பட்டுள்ள உண்டியல்களில் நகை பணம் காணிக்கையாக செலுத்துகின்றனர்.

கடந்த 29 நாட்களில் பக்தர்கள் செலுத்தக்கூடிய உண்டியல் காணிக்கை கோயில் நிர்வாகம் சார்பாக கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தி உண்டியல்கள் திறக்கப்பட்டு நகை பணம் பொருள் சல்லடை மூலம் தனித்தனியாக பிரிக்கப்படுகிறது. இதற்கான பணிகளை ஆலய செயல் அலுவலரும் துணை ஆணையராக விளங்கக்கூடிய திருமதி. ரமணி அம்மா அவர்கள் மேற்பார்வையில் ஆலய அறங்காவலர்கள் முன்னிலையில் காணிக்கை என்னும் பணியில் ஜவான்கள் ஈடுபட்டினர். காலை முதல் இரவு வரை நடைபெற்ற காணிக்கை என்னும் பணி நிறைவாக ரூ.1 கோடியே 61 லட்சத்து 45 ஆயிரத்து 924 ரூபாய் காணிக்கையாகவும், 603 கிராம் தங்கம் மற்றும் 5780 கிராம் வெள்ளி பக்தர்கள் உண்டியல்களில் காணிக்கையாக செலுத்தப்பட்டதாக திருக்கோயில் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டது. காணிக்கை நகை பணம் போலீசார் பாதுகாப்புடன் வங்கியில் செலுத்தப்பட்டது.

## ஒரு தவறு செய்தால் அதை தெரிந்து செய்தால் அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன் 'wait and watch' முரசொலி பத்திரிகையில் சண்முகம் ஐயா அவர்களை ஏளனமாக எழுதுவதை ஏற்றுக்கொள்ள முடியாது அமைச்சர் ராஜ்மோகன் பேட்டி

சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்களின் 121 வது பிறந்தநாள் முன்னிட்டு தமிழக அரசு சார்பில் சென்னை தி.நகர் உள்ள சர் தியாகராயா சாலையில் உள்ள அவருடைய திருவுருவ சிலைக்கு பூ அலங்காரம் செய்து அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு அமைச்சர்கள் நீர்வளத்துறை அமைச்சர் என் ஆனந்த், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் உணவுத்துறை அமைச்சர் வெங்கட்ராமன் மலர் தூவி மரியாதை செலுத்தி வருகின்றனர்

சிலப்பதிகாரத்திற்கு மாநாடு நடத்தியவர், தமிழ் தமிழ்நாடு எனவாழ்ந்த உணர்வாளர் சிலம்புச் செல்வன் ம பொ சி அவர்களது சிலைக்கு மாலை அணிந்து மகிழ்ந்தோம். அவர்கள் காட்டிய வழியில் தமிழ் உணர்வோடு பயணிப்போம்

உலகம் முழுவதும் தமிழர்கள் வாழ்கிறார்கள். அவர்களை ஒன்றுபடுத்தி ஒருமைப்படுத்தி மிகப்பெரிய மாநாடு நடத்துவதற்காக முதலமைச்சருடன் கலந்து ஆலோசித்து விரைவில் நல்ல அறிவிப்பை அறிவிக்கப்படும் அதற்கான முதல் அடி அடுத்த வாரம் துவங்கப்படுகிறது.

TNPSC சம்பந்தமான விண்ணப்பங்கள் பெறப்பட்டு எந்தெந்த இடங்களில் காலிப் பணியிடங்கள் உள்ளது என்பதை கண்டறிந்து அதை விரைவில் நிரப்ப இருக்கிறோம்.

என் பெயரை சொல்லி அரசியல்வாதிகள் தவறு செய்தாலும் அதிகாரிகள் தவறு செய்தாலும் கொஞ்சம் கூட அனுமதிக்காதீர்கள்.

முரசொலி பத்திரிகையில் சண்முகம் ஐயா அவர்களை குறித்து எழுதுவதை குறித்து ஏளனமாக எழுதுவது ஏற்றுக்கொள்ள முடியாது. அரசியல் என்பது நாகரிக எல்லையில் நிற்க வேண்டும். கலைஞர் உயிரோடு இருந்திருந்தால் இதனை கண்டிப்பாக கண்டித்திருப்பார். சிவப்பு துண்டைசிறுமைசெய்தால்இரட்டை போர் யானை பார்த்துக்கொள்ளும். தமிழக வெற்றி கழகம் சார்பாக இதனை கடுமையாக கண்டிக்கிறேன்.

பள்ளிகளில் பீஸ்ட் பட பாடல் பாடப்பட்டதை தொடர்ந்து அது குறித்து ஆராயப்பட்டது. ஆனால் அது 2022 ஆம் ஆண்டு வெளியானது" என்றார்.

முன்னாள் அமைச்சர் எ.வ வேலு மீது அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையும் இல்லை. ஆதாரத்துடன், முகாந்திரம் உள்ளதால் வழக்கு பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. துணிச்சலுடன், சட்டப்பூர்வமாக இந்த வழக்கை அவர் எதிர்கொள்ள வேண்டும். குறைந்த பட்சமாக ஜெகத்ரட்சகன் தனக்கு விதிக்கபட்ட அபராதத்தை காட்டுவதாக சொன்னது போல எ.வ.வேலு இந்த வழக்கை எதிர்கொள்ள வேண்டும். அவர் மீது துறை சார்ந்து வந்துள்ள புகார் என்ற அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆதாரத்துடன் ஒருவர் சிக்கியுள்ளார். அடுத்தடுத்து இன்னும் வரும். ஒரு தவறு செய்தால் அதை தெரிந்து செய்தால் அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன் *wait and watch* ரய்டு நடத்தியவருக்கு அமைச்சர் பதவி கொடுத்தது நாங்கள் இல்லை.. என்ற விமர்சனத்திற்கு,

எ.வ.வேலு எந்த கட்சியில் இருந்து வந்தவர் என அனைவருக்கும் தெரியும், திமுகவில் பல அதிமுகவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவர்கள் தான். இந்த வழக்கை எ.வ.வேலு எதிர்கொள்ள அவருக்கு வலுகொடுக்க வேண்டிக்கொள்கிறேன்.

## பொது நிறுவனங்களுக்கு வரும் பணங்களை கண்காணிக்க ஏற்கனவே உள்ள குழுக்களே ஏற்கனவே உள்ள நடைமுறைகளே போதுமானது எங்களுக்கு இந்த மசோதா வேண்டாம் என திமுக எம்.பி.வில்சன் பேட்டி




*Foreign Contribution (Regulation) Amendment (FCRA) Bill* எனப்படும் வெளிநாடு நிதிப் பங்களிப்பு ஒழுங்குமுறை திருத்த சட்டமசோதா 2026 எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக சிறுபான்மையினருக்கான கூட்டு நடவடிக்கை குழு தலைவருமான, திமுக எம்.பியுமான வில்சன் சென்னை பத்திரிக்கையாளர் மன்றத்தில் செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது திமுக எம்.பி வில்சன் பேசியதாவது,

வெளிநாடு நிதிப் பங்களிப்பு ஒழுங்குமுறை திருத்த சட்ட மசோதா 2026 நாடாளுமன்றத்தில் கடந்த மார்ச் மாதம் மசோதாவை மத்திய அரசு தாக்கல் செய்துள்ளது. இது ஒரு கொடூரமான மசோதா எனவும் இந்த சட்டமசோதாவில் பல திருத்தங்களை கொண்டு வந்து இருக்கிறார்கள் எனவும் FCRA உரிமம் பெற்ற ஒரு தொண்டு நிறுவனத்தின் பதிவு ரத்தானாலோ அது புதுப்பிக்கப் படவில்லை என்றாலோ அல்லது உரிமத்தை சம்பந்தப்பட்ட தொண்டு நிறுவனமே சரண்டர் செய்தாலோ அதன் ஆளுகைக்கு உட்பட்ட சொத்துகள் வெளிநாட்டு நிதி ஆகியவை மத்திய அரசால் கையகப்படுத்தப்படலாம் நிர்வகிக்கப் படலாம் அல்லது தேவைப்படின் அரசு அதை விற்பனை செய்யலாம் என்கிறது இந்த மசோதாவில் உள்ளது.

இந்த மசோதா இரண்டு அவையில் நிறைவேற்றி அதற்கு குடியரசு தலைவர் ஒப்புதல் அளித்து சட்டமாக வந்தால் இஸ்லாமியர்கள் சிறுபான்மையினர் ஜெயின் சமூகத்தினர்

சொத்துகள் பறிபோகும், வெளிநாட்டில் இருந்து நிதி உதவி பெறும் நிறுவனங்களுக்கு மத்திய அரசு லைசன்ஸ் கொடுக்கும் அந்த லைசன்ஸ் இல்லாதவர்கள் பணம் பெற்றால் சட்டப்படி குற்றமாகும் ஏற்கனவே 20 ஆயிரத்து 700 லைசன்ஸ்கள் ரத்து செய்து உள்ளனர்

லைசன்ஸ் புதுப்பிக்கவில்லை என்றால் இந்த மசோதா சட்டம் ஆகி விட்டால் மத்திய அரசிற்கு சென்று விடும் அப்படி சென்று விட்டால் அந்த நிறுவனத்துக்கு நோட்டீஸ் கொடுக்காமலேயே அதை விற்றுவிடலாம் என தெரிவித்தார்.

இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிராக மத்திய அரசு செயல்படுகிறது. இது சட்டமாக வரும் போது மேல்முறையீடு செய்வது வேறு ஆனால் தவறான முறையில் இந்த லைசன்ஸ் யை கேன்சல் செய்தால் அதற்கு மேல் முறையீடு செய்யும் வகையில் எதுவும் குறிப்பிட வில்லை நீதிமன்றத்திற்கு செல்லும் முன்பே மத்திய அரசிற்கு சென்று விடும்

தற்போது இதற்காக சிறுபான்மையினர் மீதான கூட்டு நடவடிக்கை மன்றம் என்ற உருவாக்கி உள்ளோம். இந்த மசோதாவை எதிர்த்து வரும் ஜூன் 28 ஆம் தேதி தேசிய பிரார்த்தனை நாளில் தேசிய உண்ணாவிரத நாளாக கடைபிடிக்க உள்ளோம்

இந்த மசோதாவை எதிர்த்து ஜூலை 3 ஆம் தேதி போராட்ட நாளாக அறிவிக்க உள்ளோம். அனைத்து நிறுவனங்களும் போராட்டம் மேற்கொள்ள உள்ளோம் கையெழுத்து இயக்கங்கள் இந்த கையெழுத்துகளை மாவட்ட ஆட்சியர் மூலம் பிரதமர் மோடி அவர்களுக்கு அனுப்ப உள்ளோம் இந்த மசோதாவை திரும்ப பெற வேண்டும் என பிரதமர் மோடி இடம் கோரிக்கை வைக்க உள்ளோம் அந்தெந்த மாநிலத்தில் போராட்டம் நடைபெறும் தமிழகத்தில் நடைபெறும் போராட்டத்தில் மதங்களை கடந்து கட்சிகளை கடந்து போராட்டத்தை முன்னெடுக்க உள்ளோம்

ஒரு சில நிறுவனங்களின் சொத்துகளை கொள்ளை அடிக்க இந்த மசோதாவை மத்திய அரசு திருத்தங்களை கொண்டு வந்துள்ளது.

பயங்கரவாதத்துக்கு பணம் சென்று விடும்... மதமாற்றதுக்கு பணம் சென்று விடும் என்றால்... நிழலை பார்த்து கூட பயப்படலாம்... பணம் எங்கு வருகிறது எங்கு செல்கிறது எல்லாமே கண்டு பிடிக்கலாம்... அவ்வளவு அதிகாரம் இருக்கும் போது ஏன் இதுபோன்ற சட்டத்தை கொண்டு வர வேண்டும். எதையோ காரணம் காட்டுகிறார்கள். அபோடி தவறாக பயன்படுத்தினால் அப்போது அதை ரத்து செய்யுங்கள்.

எப்படி சொத்துகளை பறிமுதல் செய்ய முடியும் ? அவர்கள் சிறுபான்மையினரை இலக்காகவைக்கிறார்கள். ஆனால், பெரும்பான்மையானோரையும் பாதிக்கும். இந்துக்களின் கோயில்கள், சொத்துகளையும் பறிக்கும் வாய்ப்புகள் உள்ளது.

இந்த மசோதாவை தெளிவு இல்லாமல் கொண்டு வருகிறார்கள் எனவும் மக்கள் விரோத மசோதாவை கொண்டு வருகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

இந்தியாவின் ஒருமைபாட்டை அமைதியை சீர்குலைக்கும் மசோதாவா இது உள்ளது. திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களும் எங்களுக்கு ஆதரவு தருவதாக கூறி உள்ளார்.

எங்களுக்கு இந்த மசோதாவே தேவையில்லை எனவும் பொதுமக்கள் இதற்கு பிறகு இந்த மசோதாவை எதிர்த்து போராட வேண்டும் எனவும் தேசிய அளவில் காங்கிரஸ் கேரளாவில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்ளிட்டவை இந்த மசோதாவிற்கு எதிர்பாக உள்ளனர். நாடாளுமன்றத்திலும் இந்த மசோதவை எதிர்த்து நாடாளுமன்றத்தில் போராட்டமும் மேற்கொண்டுள்ளனர்.

நாடு முழுவதும் சிறுபான்மையினர் மீதான கூட்டு நடவடிக்கை மன்றம் ஒவ்வொரு அரசியல் கட்சி தலைவர்களை சந்தித்து வரும் நிலையில் முதலமைச்சர் விஜயை சந்திக்க உள்ளனர் என தெரிவித்தார்.

# அரசு ஊழியர்கள், ஓய்வூதியதாரர்களுக்கு புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம் தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, ஜூன் 27

தமிழக அரசு ஊழியர்கள், அரசு ஓய்வூதியதாரர்கள் மற்றும் தகுதியுடைய குடும்ப உறுப்பினர்களுக்கான புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம்2026 அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டம் ஜூலை 1 முதல் 2031ம் ஆண்டு ஜூன் 30 வரை 5 ஆண்டுகள் நடைமுறையில் இருக்கும். இந்த திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் பணமில்லா முறையில் ரூ.7.50 லட்சம் வரை மருத்துவ உதவி பெறலாம். 46 வகையான தீவிர நோய்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.12 லட்சம் வரை சிகிச்சை வசதி வழங்கப்படும்.

அரசு ஊழியர்களுக்கு கூடுதலாக கார் பஸ் நிதி மூலம் ரூ.15 லட்சம் வரை உதவி கிடைப்பதால், மொத்தம் ரூ.27 லட்சம் வரை மருத்துவ உதவி பெற முடியும். இந்த திட்டத்தில் 2,992 சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் சேர்க்கப்பட்டுள்ளன. 1,535 தனியார் மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகள் இணைக்கப்பட்டுள்ளன. தூய்மைப் பணியாளர்கள், அங்கன்வாடி, சத்துணவு ஊழியர்கள் உள்ளிட்டோரும் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். குறைந்த ஊதியம் பெறுவோருக்கான பிரீமியத்தை அரசே ஏற்கும் என தமிழக அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# லஞ்ச ஒழிப்புத்துறை சோதனை; த.வெ.க அரசின் பழிவாங்கல் நடவடிக்கை எ.வ.வேலு குற்றச்சாட்டு



சென்னை, ஜூன் 27

பொதுப்பணித்துறையில் முறைகேடு குற்றச்சாட்டின் பேரில் தி.மு.க. முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு வீடு, அலுவலகங்களில் தமிழக லஞ்ச ஒழிப்புத் துறை தமிழகம் முழுவதும் 14 இடங்களில் சோதனை நடத்தியது. ரூ.40 லட்சம் ரொக்க பணம் பறிமுதல் செய்ததாக லஞ்ச ஒழிப்புத்துறை கூறியிருந்த நிலையில், செய்தியாளர்க்ளுக்கு பேட்டி அளித்த எவ வேலு கூறியதாவது:

சம்பந்தமே இல்லாமல் பொறியியல் கல்லூரியில் சோதனை நடத்துகிறார்கள்; சோதனையால் நாங்கள் அஞ்சி விடுவோம் என தவெக அரசு நினைக்கிறது நாங்கள் நிரபராதி என்பதை நீதிமன்றத்தில் நிருபிப்போம்; ரூ.40 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டதாக லஞ்ச ஒழிப்புத்துறை தெரிவிப்பது தவறான தகவல்; ஒரு பைசா கூட கைப்பற்றவில்லை; கரூர் சாலைப் பணிக்கான நெடுஞ்சாலைத்துறை டெண்டர் தொடர்பான ஆவணங்கள் எனது இடத்தில் இருப்பதற்கு வாய்ப்பில்லை. த.வெ.க அரசின் பழிவாங்கும் நடவடிக்கையாக லஞ்ச ஒழிப்பு சோதனை நடைபெற்றது பேரவையில் தி.மு.க மீதான குற்றச்சாட்டுகளை ஆதாரங்களுடன் முன்வைக்க முதலமைச்சரிடம் வலியுறுத்தினோம்; முதலமைச்சரிடம் சட்டப்பேரவையில் கேள்வி கேட்டதால் சோதனை நடத்தப்பட்டுள்ளது" என்றார்.

# புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் 'கட்சி நிதி' அமைச்சர் நிர்மல் குமார் தகவல்



சென்னை, ஜூன் 27

'கட்சி நிதி' பற்றி மின்சாரத்துறை அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல்குமார் நிருபர்களிடம் கூறியதாவது:

புதுப்பிக்கத்தக்க எரிசக்திகளுக்காக விண்ணப்பங்கள் கொடுத்தவர்களை கேட்டால், 'பார்ட்டி பண்ட்' (கட்சி நிதி) என்றால் என்ன? என சொல்வார்கள். இப்போது கட்சி நிதி கொடுத்துவிட்டு கிடைக்காமல் இருப்பவர்கள் யாராக இருந்தாலும் சொல்லலாம். அதை வாங்கி திரும்ப கொடுக்கவும் தயாராக இருக்கிறோம்.

கட்சிநிதி கொடுத்து பெரிய சிக்கலில் இருந்த துறை புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை. ஒரு மெகா வாட்டுக்கு ரூ.20 லட்சம் முதல் ரூ.25 லட்சம் வரை வாங்கிக்கொண்டுதான் விண்ணப்பங்களே உள்ளே சென்று இருக்கிறது. அதன் பிறகு கமிஷன், இடம் உள்ளிட்டவை எல்லாம் சேர்த்துதான் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை இருந்து வந்தது.

அதை வெளிப்படையாக மாற்ற வேண்டும் என்ற நோக்கில், 'அப்ளிகேஷனை' உருவாக்கியுள்ளோம். 'பேட்டரி ஸ்டோரேஜ்' என்பதை முதன்மையாக கொண்டுதான் இதை செயல்படுத்த உள்ளோம். சோலார் மற்றும் காற்றாலை ஸ்டோரேஜ் இல்லாமல் அனுமதி கொடுத்து வைத்திருக்கிறார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# பழனி முருகன் கோவிலில் விரைவு தரிசனம் செய்ய பக்தர்களிடம் ரூ.3 ஆயிரம் லஞ்சம் பெற்ற காவலாளி பணி நீக்கம்



பழனி, ஜூன் 27

திண்டுக்கல் மாவட்டம், பழனி முருகன் கோவிலில் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்கின்றனர். கடந்த சில நாட்களுக்கு முன்பு பழனி முருகன் கோவிலுக்கு தரிசனம் செய்ய 3 பக்தர்கள் வந்தனர். அவர்களிடம் விரைவாக தரிசனத்துக்கு அழைத்து செல்வதாக கூறி கோவில் ரோப்கார் நிலையத்தில் இருந்த தனியார் நிறுவன காவலாளி முத்து ரூ.3 ஆயிரம் லஞ்சம் பெற்றதாக தெரிகிறது. பின்பு பக்தர்கள் பணம் கொடுத்து தரிசனம் செய்துவிட்டு சென்றனர்.

இதுபற்றி அவர்கள் கோவிலில் பணியாற்றி வரும் தங்களது உறவினரிடம் தெரிவித்தனர். அவர், கோவில் இணை ஆணையர் மாரிமுத்துவிடம் புகார் தெரிவித்தார். அதைத்தொடர்ந்து லஞ்சம் பெற்றது குறித்து அவர் விசாரணை நடத்தி, அங்கிருந்த கண்காணிப்பு கேமராக்களையும் ஆய்வு செய்தார்.

இதில், காவலாளி முத்து பக்தர்களிடம் இருந்து ரூ.3 ஆயிரம் லஞ்சம் பெற்றது உறுதியானது. அதைத்தொடர்ந்து காவலாளி முத்துவை பணிநீக்கம் செய்து இணை ஆணையர் அதிரடியாக உத்தரவிட்டார். அதோடு அவர் பணி செய்து வந்த செக்யூரிட்டி நிறுவனத்துக்கும் விளக்கம் கேட்டு நோட்டீசும் அனுப்பியுள்ளார்.

# எழும்பூர்-நாகர்கோவில் வந்தே பாரத் ரெயில் சேவையில் மாற்றம்



சென்னை, ஜூன் 27

தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

நெல்லை பணிமனையில் நடைபெறும் பராமரிப்பு பணி காரணமாக சில ரெயில் சேவைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:

சென்னை எழும்பூரில் இருந்து வருகிற 30ந்தேதி காலை 5 மணிக்கு புறப்பட்டு நாகர்கோவில் செல்லும் வந்தே பாரத் ரெயில் (வண்டி எண்.20627), அதற்கு மாற்றாக சென்னை எழும்பூரில் இருந்து 45 நிமிடம் தாமதமாக காலை 5.45 மணிக்கு புறப்பட்டு நாகர்கோவில் செல்லும்.

இதேபோல, நாகர்கோவிலில் இருந்து வருகிற 30ந்தேதி மதியம்2.20மணிக்கு புறப்பட்டு எழும்பூர் வரும் வந்தே பாரத் ரெயில் (20628), நாகர்கோவிலில் இருந்து 1 மணி நேரம் 10 நிமிடம் தாமதமாக மாலை 3.30 மணிக்கு புறப்பட்டு எழும்பூர் வரும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# 'பாஸ்போர்ட்டு' விண்ணப்ப கட்டணம் அதிகரிப்பு ஜூலை 1ந்தேதி முதல் அமல்

சென்னை, ஜூன் 27

வேலை, படிப்பு, சுற்றுலா போன்ற காரணங்களுக்காக வெளிநாடுகள் செல்வோர்கள் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அந்த வகையில், நாடு முழுவதும் 'பாஸ்போர்டு'க்காக தினந்தோறும் 30 ஆயிரம் முதல் 40ஆயிரம்விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் பாஸ்போர்ட் விண்ணப்ப கட்டணத்தை மத்திய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சகம் உயர்த்தி அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இந்த புதிய கட்டணம் ஜூலை 1ந்தேதி முதல் அமலுக்கு வர உள்ளது.

எவ்வளவு உயர்வு?

அதன் விவரம் வருமாறு:

36 பக்கங்கள்(சாதாரண விண்ணப்பம்) ரூ.1,500(தற்போதைய கட்டணம்) ரூ.2,500(புதிய கட்டணம்)

36 பக்கங்கள் (தட்கல் விண்ணப்பம்) ரூ.3,500 ரூ.5,000

60 பக்கங்கள்(சாதாரணம்) ரூ.2,000 ரூ.3,500

60 பக்கங்கள்(தட்கல் ) ரூ.4,000 ரூ.6,000

36 பக்கங்கள்(18 வயதுக்குட்பட்டவர்கள்) ரூ.1,500 1,750

36 பக்கங்கள்(தட்கல்) ரூ.3,500 ரூ.4,250

# போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு ஓட்டத்தில் பங்கேற்ற முதல்அமைச்சர் விஜய்



சென்னை, ஜூன் 27

போதைப்பொருளுக்கு எதிராக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 'ஸ்டார்ட் ரன்... ஸ்டாப் டிரக்ஸ்' என்ற பெயரில் இன்று விழிப்புணர்வு ஓட்டம் நடைபெற்றது. சென்னை காமராஜர் சாலையில் இந்த விழிப்புணர்வு ஓட்டம் நடைபெற்றது.

இந்த விழிப்புணர்வு ஓட்டத்தை முதல்அமைச்சர் விஜய் தொடங்கி வைத்து ஓட்டத்தில் பங்கேற்றார். அவருடன் அமைச்சர்கள் ஆதவ் அர்ஜுனா, என். ஆனந்த், மரிய வில்சன், வெங்கட்ராமன் தலைமைச் செயலாளர் உள்பட பலர் பங்கேற்றனர்.

முதல்அமைச்சர் விஜய் விழிப்புணர்வு ஓட்டத்தில் பங்கேற்ற விளையாட்டு வீரர்கள், இளைஞர்கள், பொதுமக்களுடன் இணைந்து ஓடினார்.

# இந்தியாவின் முதல் தனியார் தங்கச்சுரங்கம் ஆந்திராவில் தொடக்கம்



மும்பை, ஜூன் 27

இந்தியா தனது உள்நாட்டுத் தங்கத் தேவையின் பெரும் பகுதியை வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்கிறது. கடந்த 2015 மற்றும் 2021ம் ஆண்டுகளில் மத்திய அரசு கொண்டு வந்த சுரங்கக் கொள்கை சீர்திருத்தங்கள் மூலமாக தனியார் நிறுவனங்கள், தங்க சுரங்கங்களை அமைக்கலாம். அதன்படி சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவில் முதல்முறையாக வணிகரீதியிலான ஒரு பெரிய தனியார் தங்கச்சுரங்கத் திட்டம் ஆந்திரபிரதேசத்தில் தனது உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

கர்னூல் மாவட்டம், துக்கலி மண்டலத்தில் அமைந்துள்ள சுவர்ணகிரி தங்கச் சுரங்கத் திட்டத்தை ஆந்திர முதல் மந்திரி சந்திரபாபு நாயுடு அதிகாரப் பூர்வமாகத் திறந்து வைத்தார். சுமார் ரூ.405 கோடி முதலீட்டில் உருவாக்கப் பட்டுள்ள இந்தத் திட்டம், நாட்டின் கனிம வளத்துறையில் ஒரு புதிய தொடக்கமாகக் கருதப்படுகிறது.

கடந்த காலங்களில் மவுரியபேரரசு காலத்திலேயே தங்கம் வெட்டி எடுக்கப்பட்ட பெருமை இந்த சுவர்ணகிரி பகுதிக்கு உண்டு. பல நூற்றாண்டுகளுக் குப் பிறகு இப்போது நவீன தொழில்நுட்பத்துடன் இந்தத் தளம் மீண்டும் உயிர் பெற்றுள்ளது. தற்போது இந்தியாவில் கர்நாடகாவின் 'ஹட்டி அரசுத் தங்கச் சுரங்கம் மட்டுமே உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்து வரும் நிலையில், அதற்கு மாற்றாக உருவெடுத்துள்ள முதல் பெரிய அளவிலான பாறைகளில் இருந்து நேரடியாக தங்கம் பிரித்தெடுக்கும் தனியார் தளம் இதுவாகும்.

நடப்பு 202627 நிதியாண்டில் முதற்கட்டமாக 400 கிலோ தங்கம் உற்பத்தி செய்யவும், பின்னர் ஆண்டுக்கு 2 டன் உற்பத்தி செய்யவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

# தூய்மைப் பணியாளர்களுக்கு தவெக அரசு தரும் மரியாதை இதுதானா? வானதி சீனிவாசன் கேள்வி



சென்னை, ஜூன் 27

பாஜக தேசிய மகளிரணி தலைவர்வானதிசீனிவாசன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

சென்னை, திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலக திறப்பு விழாவில் தூய்மைப் பணியாளர்களைக் கொண்டு அங்கு வந்திருந்த தவெக நிர்வாகிகளின் காலணிகளை கைகளால் அப்புறப்படுத்த வைத்ததாக வெளியான காணொளி கடும் கண்டனத்திற்குரியது.

அண்ணல் அம்பேத்கர், அஞ்சலை அம்மாள் உள்ளிட்டோரை கொள்கைத் தலைவர்கள் என்று கூறும் தவெகவினர் தூய்மைப் பணியாளர்களை அவமதிக்கும் வகையில் இதுபோன்ற பிற்போக்குத் தனமான தீண்டாமையை அரங்கேற்றியிருப்பது சமூக நீதிக்கு எதிரான செயல். கொரோனா காலகட்டத்தில் தங்களது உயிரைப் பொருட்படுத்தாமல் மக்களின் உயிர் காத்த தூய்மைப் பணியாளர்களுக்கு தவெக அரசு தரும் மரியாதை இதுதானா? இனி இதுபோன்ற செயல்களைத் தடுத்து தூய்மைப் பணியாளர்களுக்கு உரிய மரியாதையைக் கொடுத்து, அவர்களை கண்ணியமாக நடத்திட வேண்டும் என வேண்டும் முதல்வர் விஜய் அவர்கள் தனது கட்சி நிர்வாகிகளுக்கு அறிவுறுத்த வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருச்செந்தூர் கோவில் அன்னதானத்தில் புழுவை நெளியவிட்ட அரசு! நயினார் நாகேந்திரன்



சென்னை, ஜூன் 27

தமிழக பாஜக தலைவர் நயினார்நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் நேற்று மதியம் பரிமாறப்பட்ட அன்னதானத்தில் புழு இருந்ததாக வெளிவந்துள்ள காணொளி மிகுந்தஅதிர்ச்சியளிக்கிறது.

2 நாட்களுக்கு முன்பு திருச்செந்தூர் திருக்கோவிலின் சேவைக் கட்டணத்தை நான்கு மடங்கு உயர்த்தத் திட்டமிட்டதில் காட்டிய அக்கறையை அன்னதான உணவின் தரத்தில் காட்டாதது ஏன்? ஜோசப் விஜய் அரசுக்கு திருக்கோவிலின் வருமானம் மட்டும் முக்கியம், பக்தர்கள் உயிர் முக்கியமில்லையா? அன்று முறுக்கு பாக்கெட்டு உற்பத்தித் தேதிக்கு ஆதாரம் கேட்ட இந்து அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ், இன்று புழு நெளிந்ததாக எழுந்துள்ள புகாரை எளிதாகக் கடந்து செல்லக் கூடாது! உடனடியாக புகாரை தீர விசாரித்து, அன்னதான உணவின் தரத்தை உறுதி செய்ய வேண்டும் என முதல்அமைச்சர் விஜய் தலைமையிலான அரசை வலியுறுத்துகிறேன்! இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நெகிழி ஒழிப்பில் நேருஜி பள்ளி மாணவன் திண்டுக்கல்லுக்குக் கிடைத்த 'பசுமைத் தூதுவன்' தர்ஷன்



பூமிப் பந்தையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் பிளாஸ்டிக் அரக்கனுக்கு எதிராக, திண்டுக்கல்லில் இருந்து ஒரு சிறிய கரங்கள் புரட்சியைத் தொடங்கியுள்ளன. திண்டுக்கல் கொட்டபட்டியைச் சேர்ந்த, நேருஜி நினைவு மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியின் மாணவன் தர்ஷன், தனது அசாத்தியமான சுற்றுச்சூழல் சேவைகளால் இன்று ஒட்டுமொத்த திண்டுக்கல் மாவட்டத்தின் 'பசுமைத் தூதுவனாக' உருவெடுத்துள்ளார்.

பிளாஸ்டிக் அரக்கனுக்கு எதிரான போர்!இன்றைய டிஜிட்டல் காலகட்டத்தில், பள்ளி விடுமுறை நாட்களை மொபைல் போன்களிலும், கணினிகளிலும் கழிக்கும் மாணவர்களுக்கு மத்தியில் தர்ஷன் முற்றிலும் மாறுபடுகிறார். ஒவ்வொரு விடுமுறை நாளிலும் கொட்டபட்டி மற்றும் அதன் சுற்றுவட்டாரக் கிராமங்களின் தெருக்களில் இறங்கி, பொது இடங்களில் தேங்கிக் கிடக்கும் பிளாஸ்டிக் மற்றும் நெகிழிக் கழிவுகளைத் தனது கைகளாலேயே அப்புறப்படுத்தி வருகிறார். "நாம் தூக்கி எறியும் ஒரு பிளாஸ்டிக் பை மட்குவதற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகள் ஆகும்" என்ற விழிப்புணர்வை, வெறும் பேச்சோடு நிறுத்தாமல், களத்தில் இறங்கிச் செயல்படுத்திக் காட்டி வருகிறார் இந்த நேருஜி பள்ளி மாணவன். வீடு வீடாகத்துணிப்பை பிரசாரம் பிளாஸ்டிக்கைஅப்புறப்படுத்துவதோடுதர்ஷனின்வேலை முடிந்துவிடுவதில்லை. பிளாஸ்டிக் பைகளுக்கு மாற்றாக மக்கள் துணிப்பைகளைப் பயன்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி, கிராமப்புற வீடுகள் மற்றும் சிறு வணிகக் கடைகளுக்கு நேரடியாகச் சென்று துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து வருகிறார். நெகிழி ஒழிப்பில் இவர் காட்டும் இந்தத் தீவிரம், அப்பகுதி மக்களிடையே பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

திண்டுக்கல்லின் 'பசுமைத்தூதுவன்'நெகிழி ஒழிப்போடு சேர்த்து, மண்ணின் வளத்தை மீட்டெடுக்கத் தீவிரமாக மரக்கன்றுகளை நட்டு வருகிறார் தர்ஷன். இதுவரை நூற்றுக்கணக்கான நிழல் தரும் மரக்கன்றுகளை நட்டு, பராமரித்தும் வருவது இவரின் சுற்றுச்சூழல் அர்ப்பணிப்பைக் காட்டுகிறது. பசிப்பிணியும், விளையாட்டுத் திருவிழாவும்!சுற்றுச்சூழல் மட்டுமின்றி, தர்ஷனின் சமூகச் சேவை பல பரிமாணங்களைக் கொண்டது ஆதரவற்றோருக்கு உணவு தனது சிறு சேமிப்புப் பணத்தைக் கொண்டு, திண்டுக்கல் பேருந்து நிலையம் மற்றும் சாலையோரங்களில் வசிக்கும் ஆதரவற்ற முதியவர்களைத் தேடிச் சென்று வாரம் தோறும் உணவு வழங்கி வருகிறார். விளையாட்டுப் போட்டிகள் கிராமப்புற மாணவர்களிடம் மறைந்து கிடக்கும் விளையாட்டுத் திறமைகளை வெளிக் கொண்டு வர, விடுமுறை நாட்களில் சிறுவர்களை ஒருங்கிணைத்துக் கபாடி, கிரிக்கெட் , கேரம் போன்ற போட்டிகளைத் தானே முன்னின்று நடத்தி, தனது சொந்த செலவில் பரிசுகளை வழங்கி ஊக்கப்படுத்துகிறார்.

குவியும் பாராட்டுகள் அரசு பள்ளியில் படித்துக் கொண்டே, இந்தச் சிறிய வயதில் தர்ஷன் காட்டும் சமூகப் பொறுப்பு திண்டுக்கல் மாவட்ட மக்களிடையே பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. "நாட்டின் எதிர்காலம் வகுப்பறைகளில் மட்டுமல்ல, தர்ஷன் போன்ற மாணவர்களின் சமூக அக்கறையிலும் வளர்கிறது" என நேருஜி நினைவு மாநகராட்சி பள்ளி ஆசிரியர்களும், மாவட்டக் கல்வி அதிகாரிகளும் தர்ஷனைப் பாராட்டிப் பெருமிதம் கொள்கின்றனர். இளைய தலைமுறைக்குச் சமூக அக்கறையையும், பசுமைப் புரட்சியையும் விதைக்கும் தர்ஷனின் இப்பயணம் மென்மேலும் தொடர வாழ்த்துக்கள்

# நடப்பு நிதியாண்டில் ஐ.சி.எப். தொழிற்சாலையில் 4,500 ரெயில் பெட்டிகள் தயாரிக்க இலக்கு



சென்னை, ஜூன் 27

சென்னை பெரம்பூரில் உள்ள ஒருங்கிணைந்த ரெயில் பெட்டி தொழிற்சாலையில் (ஐ.சி.எப்.) இந்திய ரெயில்வேக்கு தேவையான ரெயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டு வருகிறது. வந்தே பாரத், மின்சார ரெயில், எல்.எச்.பி. எனப்படும் இலகுரக ரெயில் பெட்டிகள், ஹைட்ரஜன் ரெயில்கள் என பல்வேறு வகையிலான பெட்டிகள் இங்கு தயாரிக்கப்படுகிறது.

கடந்த 202324ம் நிதியாண்டில் 2,829 பெட்டிகள் தயாரிக்கப்பட்டது. 202425ம் நிதியாண்டில் 3,007 ரெயில் பெட்டிகளும், 202526ம் நிதியாண்டில் 3,405 ரெயில் பெட்டிகளும் ஐ.சி.எப். தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டது. இந்தநிலையில், நடப்பு நிதியாண்டில் (202627) ஐ.சி.எப். தொழிற்சாலையில் எவ்வளவு பெட்டிகள் தயாரிக்க ரெயில்வே வாரியம் இலக்கு நிர்ணயித்துள்ளது என்பதன் விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, ஐ.சி.எப். அதிகாரிகள் கூறும்போது, "நடப்பு நிதி யாண்டில் (202627)ஐ.சி.எப். தொழிற்சாலையில் 4,500 ரெயில் பெட்டிகள் தயாரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 3,520 எல்.எச்.பி. பெட்டிகளும், 8 தூங்கும் வசதி கொண்ட வந்தே பாரத் ரெயில்களுக்கான பெட்டிகளும், 14 அம்ரித் பாரத் ரெயில்களுக்கான பெட்டிகளும், 1 சரக்கு ரெயிலுக்கான பெட்டிகளும் இதில் அடங்கும்.

இலக்கை விரைவில் அடையும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த நிதியாண்டில் அதிக அளவில் எல்.எச்.பி. பெட்டிகளை தயாரித்து சாதனை படைத்ததைபோலவே, இந்த ஆண்டும் உற்பத்தியை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது" என்றனர்.

# தங்க மோதிரமா? தரமான மகப்பேறு சிகிச்சையா? தமிழக அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் ஜவாஹிருல்லா

சென்னை, ஜூன் 27

மனிதநேய மக்கள் கட்சியின் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான எம்.எச்.ஜவாஹிருல்லா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கும் திட்டத்தை தமிழக அரசு அறிவித்துள்ளதை மறுபரிசீலனை செய்து இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியை ஊரக பகுதிகளில் உள்ள அரசு மருத்துவமனைகளின் பிரசவ அறைகளை மேம்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழகத்தின் பல அரசு மருத்துவமனைகளில் மகப்பேறு அறைகளில் நெரிசல், மருத்துவப் பணியாளர் பற்றாக்குறை, போதிய படுக்கை வசதியின்மை மற்றும் உபகரணக் குறைபாடுகளுடன் இயங்கி வருகின்றன. பல ஏழை மற்றும் நடுத்தர குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் இந்த குறைபாடுகளின் மத்தியில் பிரசவ சேவைகளைப் பெற வேண்டிய நிலை உள்ளது.



இந்நிலையில், புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்குவதற்காக கோடிக்கணக்கான ரூபாய்களை செலவிடுவது அரசின் முன்னுரிமை சரியான திசையில் உள்ளதா என்ற கேள்வியை எழுப்புகிறது.

குழந்தையின் கையில் தங்க மோதிரம் அணிவிப்பதை விட, தாயின் உயிரைக் காக்கும் நவீன மகப்பேறு அறை (வார்டு), குழந்தையின் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்தும் சிறப்பு சிகிச்சைப் பிரிவு, போதுமான மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் ஆகியவையே மக்களுக்கு உண்மையில் தேவை.

மக்களின் வரிப்பணத்தில் செயல்படும் அரசின் கடமை, காட்சிப்படுத்தும் திட்டங்களை அறிவிப்பது அல்ல; மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நீடித்த முதலீடுகளை மேற்கொள்வதாகும். தங்க மோதிரம் சில நாட்களுக்கு செய்தியாக இருக்கலாம்; ஆனால் மேம்படுத்தப்பட்ட அரசு மருத்துவமனைகள் பல தலைமுறைகளுக்கும் நன்மை பயக்கும்.

எனவே, தமிழக அரசு பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கும் திட்டத்தை கைவிட்டு, அதற்காக ஒதுக்கப்படும் நிதியை குறிப்பாக ஊரக அரசு மருத்துவமனைகளின் மகப்பேறு அறைகள், குழந்தைகள் நலப் பிரிவுகள் மற்றும் மருத்துவ கட்டமைப்பு மேம்பாட்டிற்குத் திருப்பிவிட வேண்டும். அதுவே சமூக நலனுக்கும், தாய்சேய் பாதுகாப்பிற்கும், பொது சுகாதார முன்னேற்றத்திற்கும் ஏற்ற பொறுப்பான முடிவாக இருக்கும்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# திருவள்ளூர்: லாரி முன்பு பாய்ந்து வடமாநில வாலிபர் தற்கொலை

திருவள்ளூர், ஜூன் 27

திருவள்ளூர் மாவட்டத்தில் லாரி முன்பு பாய்ந்து வடமாநில வாலிபர் தற்கொலை செய்தது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருவள்ளூர் மாவட்டம், திருமுடிவாக்கத்தில் இருந்து ஒரகடம் நோக்கி சரக்குகளை ஏற்றிக் கொண்டு ஒரு லாரி சென்றது. அதை குன்றத்தூரை சேர்ந்த மகேஷ் என்பவர் ஓட்டினார். சரக்குகளை இறக்கிவிட்டு இன்று அதிகாலை மீண்டும் திருமுடிவாக்கம் திரும்பி வந்து கொண்டிருந்தார்.

திருமுடிவாக்கம்சிட்கோ, மின்வாரிய அலுவலக ரவுண்டானா அருகே வந்த போது, 25 வயது மதிக்கத்தக்க வடமாநில வாலிபர் ஒருவர்திடீரெனசாலையில் ஓடிவந்து லாரி முன்பு பாய்ந்தார். இதில் லாரியின்சக்கரத்தில் சிக்கிய வாலிபர் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே பலியானார்.

இது தொடர்பாக குரோம்பேட்டை போக்குவரத்துப் புலனாய்வு பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இறந்த வாலிபரின் உடல்பிரேதபரிசோதனைக்காக தாம்பரம் அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

இறந்த வாலிபர் யார்? என்று தெரியவில்லை. இது தொடர்பாக அப்பகுதியில் உள்ளகண்காணிப்புகேமரா காட்சிகளை ஆய்வு செய்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். ஓடும் லாரியில் பாய்ந்து வடமாநில வாலிபர் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# 'மன்னித்துவிடுங்கள் அம்மா...' நீட் மறுதேர்வு எழுதிய மாணவர் வீடியோ வெளியிட்டு தற்கொலை



மும்பை, ஜூன் 27

சமீபத்தில் நடைபெற்ற நீட் மறுதேர்வை எழுதிய 18 வயது மாணவர், வீடியோவை ஒன்றை பதிவு செய்து தனது குடும்பத்தினருக்கு அனுப்பிவிட்டு, கிணற்றில்குதித்து தற்கொலை செய்து கொண்டார்.

எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ். உள்ளிட்ட இளநிலை மருத்துவ படிப்புகளில் சேர்வதற்காக ஒவ்வொரு ஆண்டும் நாடு முழுவதும் 'நீட் நுழைவுத் தேர்வு' நடத்தப்படுகிறது. அந்த வகையில், நடப்பாண்டிற்கான நீட் தேர்வு கடந்த மே மாதம் 3ந்தேதி நடைபெற்றது. இந்த தேர்வை லட்சக்கணக்கான மாணவர்கள் எழுதினர்.

இதனிடையே, நீட் தேர்வின் வினாத்தாள் கசிந்ததாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. இது தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை நடத்தியது. இந்த விசாரணயில் வினாத்தாள் கசிவு விவகாரத்தில் மூளையாக இருந்து செயல்பட்ட புனேவைச் சேர்ந்த வேதியியல் விரிவுரையாளர் கைது செய்யப்பட்டார்.

வினாத்தாள் கசிந்த நிலையில், நடந்து முடிந்த நீட் தேர்வு ரத்து செய்யப்படுவதாக கடந்த மே 12ந்தேதி தேசிய தேர்வு முகமை அறிவித்தது. இதைத் தொடர்ந்து நீட் மறுதேர்வு கடந்த ஜூன் 21ந்தேதி நடைபெற்றது. மொத்தம் 5 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட மையங்களில் நடந்த இந்த தேர்வை, 22.7 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் எழுதினர்.

அந்த வகையில், மராட்டிய மாநிலம் ஹிங்கோலி பகுதியை சேர்ந்த சுஷில் தாகே என்ற மாணவரும் நீட் மறுதேர்வை எழுதியிருந்தார். ஆனால் தேர்வுக்கு பிறகு அவர் சோர்வுடன் காணப்பட்டு வந்துள்ளார். மறுதேர்வு சற்று கடினமாக இருந்தது என அவர் தனது குடும்பத்தினரிடம் கூறியுள்ளார். இந்நிலையில், மாணவர்சுஷில் தாகே, தனது வீட்டின் அருகே உள்ள கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்டார்.

தற்கொலை செய்து கொள்வதற்கு முன்பு மாணவர்சுஷில் ஒரு வீடியோவை பதிவு செய்துள்ளார். அந்த வீடியோவில், "என்னை மன்னித்து விடுங்கள் அம்மா..நான்எனதுஉயிரை எடுத்துக் கொள்ளப் போகிறேன். தயவு செய்து கவலைப்படாதீர்கள் அம்மா. அடுத்த பிறவியில் மீண்டும் உங்கள் மகனாக பிறப்பேன். ஆனால்இதுபோன்ற வலியை உங்களுக்கு தரமாட்டேன்.

என்னைப்பற்றிகவலைப்படாதீர்கள். உங்கள் உடல்நலனை கவனித்துக் கொள்ளுங்கள். நான் மிகுந்த வேதனையில் இருக்கிறேன். என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. எனக்கு எதுவுமே புரியவில்லை. என்னை மன்னித்து விடுங்கள்" என்று உருக்கமாக பேசியுள்ளார். பின்னர் இந்த வீடியோவை தனது குடும்பத்தினருக்கு அனுப்பிவிட்டு, மாணவர் சுஷில் தற்கொலை செய்து கொண்டார். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# சென்னையில் பயங்கரம்: திருமண மண்டப ஊழியர்கள் 2 பேர் படுகொலை

சென்னை, ஜூன் 27

சென்னை தியாகராயநகர் பகுதியில் திருமண மண்டப ஊழியர்கள் 2 பேர் படுகொலை செய்தது குறித்து மாம்பலம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சென்னை தியாகராயநகர் பகுதியில் நேற்று இரவு இரட்டை கொலை நடத்துள்ளதாக அப்பகுதி மக்கள் மாம்பலம் போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். அதைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த போலீசார் சென்னை பாண்டிபஜார் அருகே உள்ள டாஸ்மாக் கடை அருகே தலையில் படுகாயங்களுடன் இறந்து கிடந்தவரை மீட்டு பிரேத பரிசோதனைக்காக சென்னை கே.கே.நகர் அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றனர்.

இதனை தொடர்ந்து அதே பகுதியில் சுமார் 20 மீட்டர் தூரத்தில் மற்றொருவர் உருட்டு கட்டையால் நாக்கியதில் ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடி கொண்டிருந்தார். அவரை போலீசார் 108 ஆம்புலன்ஸ் மூலம் ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று அனுமதித்தனர். அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், அவர் இன்று அதிகாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இது குறித்து மாம்பலம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

போலீசார் நடத்திய முதல் கட்ட விசாரணையில் அவர் ஆந்திரா மாநிலத்தை சேர்ந்த ரவிகுமார் (வயது 40) என்று தெரிய வந்தது. இவர் தி.நகர் பகுதியில் வாடகை வீட்டில் வசித்து வந்தார். தியாகராயநகர் பகுதியில் உள்ள ஒரு திருமண மண்டபத்தில் தொழிலாளியாக வேலை பார்த்து வந்தார். அதே போல் டாஸ்மாக் கடையின் அருகே அடித்து கொலைசெய்யப்பட்டவர்சென்னைகண்ணம்மாபேட்டை பகுதியை சேர்ந்த ராஜேந்திரன்(46) என்று தெரியவந்தது. இவரும் அதே திருமண மண்டபத்தில் ஊழியராக பணியாற்றி வந்தது தெரியவந்தது.

நேற்று இரவு தி.நகர் பகுதியில் உள்ள டாஸ்மாக் கடையில் ராஜேந்திரன் மது அருந்தியபோது அவருக்கும் எதிரே மது அருந்திய நபர்களுக்கும் இடையே வாய் தகராறு ஏற்பட்டது. இதில் அந்த கும்பல் ராஜேந்திரனை பின்தலையில் சரமாரியாக தாக்கியதில் சுருண்டு விழுந்த அவர் சம்பவ இடத்தில் இறந்தார். அதே மண்டபத்தில் தொழிலாளியாக பணிபுரியும் சலிக்குமார் திருமண விருந்து முடிந்தவுடன் சாப்பிடும் அறையை சுத்தம் செய்யும் ஊழியர்களை ஆபாச வார்த்தைகளால் திட்டியதாக தெரிய வந்துள்ளது. இதில் ஆத்திரமடைந்த சக ஊழியர் மணி என்பவர் உருட்டு கட்டியால் தொழிலாளி ரவிக்குமாரை சரமாரியாக அடித்து கொலை செய்தது தெரிய வந்தது. இந்த நிலையில் ராஜேந்திரனை கொலை செய்த பாலாஜி என்பவரை போலீசார் கைது செய்துள்ளனர்.

இந்த வழக்கு தொடர்பாக மாம்பலம் போலீஸ் இன்ஸ்பெக்டர்விஜயகாந்த்தலைமையில் 2 தனிப்படை அமைத்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் இந்த இரட்டை கொலைக்கு ஏதேனும் சம்பந்தம் உள்ளதா? என்றும் அப்பகுதியில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்களில் பதிவான காட்சிகளை வைத்து தீவிர விசாரணை செய்து வருகின்றனர்.

# அதிமுகவில் எஸ்.பி வேலுமணிக்கு மீண்டும் முக்கிய பதவி: எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

சென்னை, ஜூன் 27

அதிமுகவில் எஸ்பி வேலுமணி, நத்தம் விஸ்வநாதன், தங்கமணி உள்ளிட்டோருக்கு மீண்டும் முக்கிய பதவி வழங்கப்பட்டுள்ளது. எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக போர்க்கொடி தூக்கியதால், வேலுமணி உள்ளிட்டோரின் பதவியை எடப்பாடி பழனிசாமி பறித்த நிலையில், மீண்டும் முக்கிய பொறுப்புகளை வழங்கியுள்ளார். கட்சியில் ஏற்பட்டுள்ள அதிருப்தியை முடிவுக்கு கொண்டு வரும் விதமாக எடப்பாடி பழனிசாமி இந்த அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அதிமுக தலைமை நிலைய செயலாளராக லாகூர் அருணாசலம் நியமனம் செய்யப்பட்டுள்ளார். துணைபொதுச்செயலாளர் பொறுப்பில் கேபி முனுசாமி ஏற்கனவே இருந்து வரும் நிலையில் தற்போது எஸ்பி வேலுமணி மற்றும் நத்தம் விஸ்வநாதன் ஆகியோர் துணை பொதுச்செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அதிமுகவின் அமைப்பு செயலாளாராக அன்பழகன், காமராஜ், வீரமணி, பலகிருஷ்ண ரெட்டி ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அதிமுகவின் அமைப்பு செயலாளராக திருத்தணி கோ.அரி, மருதராஜா நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

# காதலி இறந்த துக்கத்தில் வாலிபர் தற்கொலை

தஞ்சாவூர், ஜூன் 27

தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் அருகே உள்ள இந்தலூர் கீழஅரிஜன தெருவை சேர்ந்த கலைவாணன். இவரது மகன் பழனிச்சாமி (23 வயது). இவர் திருச்சி மாவட்டத்தை சேர்ந்த ஒரு பெண்ணை காதலித்து வந்ததாக கூறப்படுகிறது. சமீபத்தில் அந்த பெண் உயிரிழந்து விட்டதால் மிகுந்த மன உளைச்சலில் இருந்த பழனிச்சாமி வீட்டில் தூக்குப் போட்டு கொண்டார். அவரை பெற்றோர் மற்றும் குடும்பத்தினர் மீட்டு சிகிச்சைக்காக பூதலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் பழனிச்சாமி இறந்து விட்டதாக தெரிவித்தனர். காதலி இறந்த துக்கத்தில் வாலிபர் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# தமிழகம் முழுவதும் 28ந்தேதி போலியோ சொட்டு மருந்து முகாம்



சென்னை, ஜூன் 27

நாடு முழுவதும் வருகிற 28ந்தேதி போலியோ சொட்டு மருந்து முகாம் நடைபெற உள்ளது. இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு பின்வருமாறு;

"தேசிய போலியோ சொட்டு மருந்து முகாம் 28 ஜூன் 2026 (ஞாயிற்றுக்கிழமை) அன்று தமிழ்நாடு முழுவதும் நடைபெறவுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு ஆரம்ப சுகாதாரநிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள், பள்ளிகள் மற்றும் முக்கிய இடங்கள் என மொத்தம் 43,051 மையங்களில் போலியோசொட்டுமருந்து வழங்கப்படும். இம்மையங்களில் 52.91 இலட்சம் 05 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்க அனைத்து ஏற்பாடுகளும் விரிவாக செய்யப்பட்டுள்ளன. தேசிய தடுப்பூசி அட்டவணைப்படி, ஏற்கனவே 0 5 வயதுடைய குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டிருந்தாலும் முகாம் நாளில் மீண்டும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட வேண்டும்.

முகாம் நடைபெறும் நாட்களில் முக்கியப் பேருந்து நிலையங்கள், ரெயில் நிலையங்கள், சுங்கச்சாவடிகள், சோதனைச் சாவடிகள் மற்றும் விமான நிலையங்களில் தற்காலிக மையங்கள் (Transit Booths) அமைக்கப்பட்டு போலியோ சொட்டு மருந்து வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

போலியோ சொட்டு மருந்து வழங்கும் மையங்கள் காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை செயல்படும். முதல்நாளான 28.06.2026 (ஞாயிற்றுக்கிழமை) அன்று அனைத்து முகாம்களிலும், 29.6.2026 மற்றும் 30.06.2026 ஆகிய இரண்டு நாட்களில் தற்காலிக மையங்களிலும் (Transit Booths) போலியோ சொட்டு மருந்து வழங்கப்படுகிறது. பிற மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டில் வசிக்கும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கும், போலியோ சொட்டு மருந்து முகாம்களில் வழங்கப்படும்.

நடமாடும் மருத்துவக் குழுக்கள்மூலமாகதொலைதூர மற்றும் எளிதில் செல்ல இயலாத பகுதிகளில் வசிக்கும் மக்கள் மற்றும் மலை வாழ் மக்களின் குழந்தைகளுக்கும் போலியோசொட்டுமருந்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளில் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட சுகாதாரப் பணியாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

எனவே, பெற்றோர்கள் இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி 5 வயதிற்குட்பட்ட தங்கள் குழந்தைகளுக்குபோலியோ சொட்டு மருந்தினை இட்டுக்கொள்ளும்படி அன்புடன்கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மனைவியை அடித்துக் கொன்ற வியாபாரி போலீசார் விசாரணை



தஞ்சாவூர், ஜூன் 27

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை ஆதிதெருவை சேர்ந்தவர் நாகராஜ் (39 வயது). இவருடைய மனைவி சத்யா (36 வயது). இவர்களுக்கு 2 பெண் குழந்தைகளும், 2 ஆண் குழந்தைகளும் உள்ளனர். கணவன், மனைவி இருவரும் பட்டுக்கோட்டையில் பழைய இரும்பு சாமான்கள் வாங்கி விற்று வந்தனர்.

நேற்றுகணவன், மனைவி இருவரும் சரக்கு வேனில் ஒவ்வொரு கிராமங்களுக்கும் பழைய இரும்பு, பிளாஸ்டிக் பொருட்களை வாங்குவதற்காக சென்றனர். ஏனாதி செல்லியம்மன்கோவில் அருகே சென்றபோது திடீரென இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. இருவரும் ஒருவரையொருவர் கைகளால் தாக்கி கொண்டதுடன், கையில் கிடைத்த ஆயுதத்தை எடுத்தும் தாக்கிக் கொண்டனர். இதில் சத்யா சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் பரிதாபமாக உயிரிழந்தார். நாகராஜ் படுகாயம் அடைந்தார். இதை பார்த்த அக்கம், பக்கத்தினர் வாட்டாத்திக்கோட்டை போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

உடனே சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற போலீசார், படுகாயமடைந்த நாகராஜை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் தஞ்சை மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் உயிரிழந்த சத்யாவின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து இந்த சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பணம் பிரச்சினை: பெண்ணை துன்புறுத்திய குற்றவாளிக்கு 3 ஆண்டுகள் சிறை

திருநெல்வேலி, ஜூன் 27

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி அருகே பணம் பிரச்சினையில் பெண்ணை துன்புறுத்திய வழக்கில், குற்றவாளிக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.10 ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

பணம் பிரச்சினை பெண்ணை துன்புறுத்திய வழக்கு:

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி அருகே 2022ம் ஆண்டு பணம் பிரச்சினை காரணமாக நாங்குநேரி பகுதியை சேர்ந்த பிரேமா (வயது 36), அவரது தாயான அருணாச்சலம்(54) என்பவரை, அதே பகுதியைச் சேர்ந்த வானுமாமலை(47) என்பவர் அசிங்கமாக பேசி அவரை துன்புறுத்தியுள்ளார். இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணையின் முடிவில் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்து, வழக்கின் விசாரணையானது நாங்குநேரி உதவி அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த நிலையில் குற்றவாளியான வானுமாமலை மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு, சார்பு நீதிமன்ற நீதிபதி ரஷ்கின் ராஜ் இன்று (25.6.2026) குற்றவாளிக்கு தண்டனை வழங்கினார்.

தண்டனை விவரம் பின்வருமாறு:

294 (b)ன்படி ரூ.1,000 அபராதம். அதை கட்ட தவறினால் 3 மாதம் சிறை தண்டனை. 4 of TNPHW Actன்படி 3 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.10 ஆயிரம் அபராதம் விதித்துதீர்ப்பு வழங்கினார். மேலும் மேற்சொன்ன தண்டனைகளை குற்றவாளி ஏக காலத்தில் (Concurrent ) அனுபவிக்க வேண்டும் எனநீதிபதி தனது தீர்ப்பில் உத்தரவிட்டார்.

கொலை வழக்கில் ஆயுள் தண்டனை கைதி:

இந்த வழக்கில் தண்டனை பெற்ற குற்றவாளியான வானுமாமலை, 2015ம் ஆண்டு நாங்குநேரியில் நடைபெற்ற கொலை வழக்கில் ஏற்கனவே ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, தற்போது ஆயுள் தண்டனை கைதியாக பாளை மத்திய சிறையில் உள்ளார்.

இந்த வழக்கில் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, குற்றவாளிக்கு தண்டனை பெற்றுக் கொடுத்த டி.எஸ்.பி. சம்பத் (பொறுப்பு DCBII), நாங்குநேரி இன்ஸ்பெக்டர் ராஜாராம், வழக்கின் விசாரணைக்கு உதவி செய்த முதல் நிலை காவலர் முருகன் மற்றும் குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தர திறம்பட வாதிட்ட அரசு வழக்கறிஞர் ஜேம்ஸ்பால் ஆகியோரை திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. விஷ்வேஷ் பா. சாஸ்திரி பாராட்டினார்.

திருநெல்வேலி மாவட்ட காவல் துறையானது, நீதிமன்றங்களில் நடைபெறும் வழக்குகளில் சாட்சிகளை ஆஜர்படுத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்று தரும் முனைப்பில் தொடர்ந்து, உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

# திமுக ஆட்சியில் பள்ளி கட்டிட அனுமதிக்கு லஞ்சம் கேட்டனர்: ஸ்ரீதர் வேம்பு குற்றச்சாட்டு



சென்னை, ஜூன் 27

திமுக ஆட்சியில், பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு, அனுமதி கேட்டபோது லஞ்சம் கேட்டதாக சோகோ நிறுவனர் ஸ்ரீதர் வேம்பு குற்றம் சாட்டியுள்ளார். இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவு பின்வருமாறு;

"நாங்கள் கலைவாணி கல்வி என்ற அமைப்பின் கீழ் தென்காசி மற்றும் தேனி அருகேஉள்ளகிராமங்களில் 2 பள்ளிகளை நடத்துகிறோம். தென்காசியில் நாங்கள் புதிய பள்ளிக் கட்டிடங்களைக் கட்ட விரும்பினோம். புதிய கட்டிடங்களைக் கட்டுவதற்கு டிடிசிபி ஒப்புதலுக்கு விண்ணப்பித்தோம். புதிய பள்ளிக் கட்டிடங்களுக்கான டிடிசிபி ஒப்புதலுக்காக நாங்கள் பொறுமையாகக் காத்திருந்தோம். ஆனால் திமுக ஆட்சியில் இருந்த வரை ஒப்புதல் ஒரு போதும் கிடைக்கவில்லை.

தேனி பள்ளியை ஓய்வு பெற்ற ஐபிஎஸ் அதிகாரி ஒருவர் நடத்தி வந்தார். தேனி பள்ளிக்கும் அவ்வப்போது தொந்தரவுகள் ஏற்பட்டன. பணம் கொடுக்காமல் தடையில்லா சான்றிதழ் கொடுக்க மாட்டார்கள் என அவர் கூறினார். தடையில்லா சான்றிதழ் வழங்க மாநில அரசு அதிக பணம் கேட்டதால் பள்ளியை அவர் மூட வேண்டியிருந்தது.

திமுக ஆட்சியில் பள்ளி கட்டிட அனுமதிக்கு லஞ்சம் கேட்டனர். தி.மு.க. ஆட்சியில் டிடிசிபியில் என்ன மாதிரியான ஊழல் நடந்தது என்பது அனைவருக்கும் தெரியும். அரசு மாறியவுடன் ஒப்புதல் தானாகவே கிடைத்தது. எந்தவொரு ஒப்புதலுக்காகவும், யாருக்கும் பணம் கொடுக்க வேண்டாம் என தற்போதைய அதிகாரிகள் எங்களிடம் கூறினார்கள்.

இதற்கு முன்பு நாங்கள் பட்டதுன்பங்களுக்கு பிறகு இதை நான் பொதுவெளியில் பாராட்டினேன். ஆனால் இதற்காக திமுகவினர் என்னை கடுமையாக வசைபாடுகின்றனர்.

அவர்களின் இழிவான தனிப்பட்ட தாக்குதல்களுக்கு நான் பணிந்துவிடுவேன் என்று அவர்கள் நினைத்தால், நான் அவர்களிடம் இதைச் சொல்வேன்.

திமுகவினரை போன்று நான் வம்சாவளி பணக்காரன் அல்ல. நான் ஏதுமில்லாமல் வளர்ந்தேன். நான் தமிழ்வழிப்பள்ளிகளில்படித்தேன். ஏதுமில்லாமல் எப்படி வாழ்வது என்று எனக்குத் தெரியும். அவர்களின் தாக்குதல்களால் நான் அஞ்சமாட்டேன்.

அவர்களுக்குச் சிறிதளவேனும் மனசாட்சி இருந்தால், அவர்கள் கொள்ளையடித்த பணத்தைத் திருப்பிக் கொடுக்கலாம். அதன் பிறகு அவர்கள் என் கதாபாத்திரத்தின் மீது தாக்குதல் நடத்தலாம்."

இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

27.06.2026



திருவாரூர் நகராட்சி எதிரில் போதை பொருள் எதிர்ப்பு மாரத்தான் விழிப்புணர்வு ஓட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.மோகனச்சந்திரன் இ.ஆ.ப.,அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.வி.சதீஷ்குமார் இ.கா.ப.,அவர்கள்,கூடுதல் ஆட்சியர்(வளர்ச்சி) திட்ட இயக்குநர் செல்வி. பல்லவி வர்மா இ.ஆ.ப.,அவர்கள், நகர்மன்ற தலைவர் திருமதி.புவணப்ரியா செந்தில் ஆகியோர் உடன் உள்ளனர்.

## திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கு வந்த தமிழக உணவு மற்றும் உணவுப் பொருள்கள் வழங்கல் துறை அமைச்சர் வருகை புரிந்து எம்எல்ஏவுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தார்



சென்னை திருவொற்றியூர் தொகுதிக்குட்பட்ட விம்கோ நகரில் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் செந்தில்குமார் அலுவலகம் நேற்று ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் புசி ஆனந்த் திறந்து வைத்து செந்தில்குமாரை இருக்கையில் உட்காரவைத்து சென்றார் இந்நிலையில் இன்று திடீரென தமிழக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் வெங்கட்ராமன் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் செந்தில்குமார் அலுவலகத்திற்கு வந்து எம் எல் ஏ செந்திலகுமாருக்கு பூங்கொத்து கொடுத்து வாழ்த்துக்களை தெரிவித்து செந்தில்குமாரை அவரது இருக்கையில் உட்காரவைத்து வாழ்த்துக்களை தெரிவித்தார் செந்தில்குமார் அமைச்சர் வெங்கட்ராமன் காலையில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கினார் இனிமே நம்ம தான் என்று அமைச்சர் தெரிவித்தார் இந்நிகழ்வில் மாவட்ட இணை செயலாளர் A. ஆனந்த், மாவட்ட பொறுப்பாளர் S.G. சீனிவாசன், மாவட்ட துணைச் செயலாளர் மாரி ஆகியோர் இந்நிகழ்வில் உடன் இருந்தனர். இதனை தொடர்ந்து அமைச்சரை திருவொற்றியூர் உள்ள தமிழக வெற்றி கழக கட்சி நிர்வாகிகள் அனைவரும் அறிமுகம் செய்து வைத்து அமைச்சருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

## மூன்று உலக சாதனைகளை படைத்து லிங்கன் புக் ஆஃப் ரெக்கார்ட்ஸில் இடம்பிடித்த சிறுமி டாக்டர் ஏ.எஸ். லயாதிகா



அசாதாரண நினைவாற்றல், சிலம்பக் கலைத் திறன் மற்றும்ரூபிக்ஸ்கியூப்தீர்க்கும்திறனைஒருங்கிணைத்து மூன்று உலக சாதனைகளை படைத்துள்ள சிறுமி A.S. லயாதிகா அவர்களை கௌரவிக்கும் "Triple World Record Certificate Honouring Ceremony" நிகழ்ச்சி சென்னை சைதாப்பேட்டையில் அமைந்துள்ள லிங்கன் புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், லிங்கன் புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ் அமைப்பின் சார்பில் லயாதிகா அவர்கள் நிகழ்த்திய மூன்று உலக சாதனைகளுக்கான அதிகாரப்பூர்வ உலக சாதனைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

உலக சாதனைகள்: உலக சாதனை – 1\ 4 நிமிடம் 20 வினாடிகளில் 23 சிலம்பம் அசைவுகளை நிகழ்த்தியபடியே, 25 இந்தி தோஹாக்களை ஒரே நேரத்தில் ஒப்புவித்து உலக சாதனை படைத்தார். உலக சாதனை – 2 3 நிமிடம் 59 வினாடிகளில் 25 இந்தி தோஹாக்களை ஒப்புவித்தபடியே பல்வேறு வகையான ரூபிக்ஸ் கியூப்களை வெற்றிகரமாக தீர்த்து வைத்து அபூர்வமான இரட்டைத் திறன் உலக சாதனையை நிகழ்த்தினார். உலக சாதனை – 3 2 நிமிடம் 19 வினாடிகளில் 23 சிலம்பம் அசைவுகளை துல்லியமாகவும் நேர்த்தியாகவும் நிகழ்த்தி உலக சாதனை படைத்தார்.

சிறுவயதிலேயே பல்துறை திறமைகளை வெளிப்படுத்தி உலக அளவில் சாதனை படைத்துள்ள லயாதிகாவின் முயற்சியை பாராட்டி, லிங்கன் புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ் நிறுவனத்தின் தலைவர் ஜோசப் இளந்தென்றல் அவர்கள் உலக சாதனைச் சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார்.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக கல்வியாளர்கள் முனைவர் பாரதி ராமகிருஷ்ணன் மற்றும் முனைவர் சரஸ்வதி ஆகியோர் கலந்து கொண்டு சிறுமியை வாழ்த்தி நினைவுப் பரிசுகளை வழங்கி பாராட்டினர்.

சிறுமி லயாதிகாவின் இந்த அபார சாதனை, இளம் தலைமுறையினருக்கு திறமை, விடாமுயற்சி மற்றும் ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் சிறந்த முன்னுதாரணமாக அமைந்துள்ளது.

## இன்றைய ராசி பலன்கள் (27.06.2026)

**மேஷம்**
வேலைகளில் முன்னேற்றம் காணலாம். புதிய முயற்சிகளில் கவனமாக முடிவு எடுக்கவும்.

**ரிஷபம்**
குடும்ப விஷயங்களில் நல்ல ஒத்துழைப்பு கிடைக்கும். செலவுகளை கட்டுப்படுத்துவது நல்லது.

**மிதுனம்**
தொடர்புகள் மற்றும் பேச்சுத்திறன் மூலம் பலன் பெறலாம். முக்கிய ஆவணங்களில் கவனம் தேவை.

**கடகம்**
பணவரவு தொடர்பான நல்ல செய்திகள் கிடைக்கலாம். உடல்நலத்தில்சிறுகவனம்அவசியம்.

**சிம்மம்**
தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள். புதிய பொறுப்புகள் வர வாய்ப்பு உள்ளது.

**கன்னி**
திட்டமிட்டு செயல்பட்டால் வெற்றி கிடைக்கும். தேவையற்ற விவாதங்களைத் தவிர்க்கவும்.

**துலாம்**
நண்பர்கள் மற்றும் உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். பயணவாய்ப்புகள் உருவாகலாம்.

**விருச்சிகம்**
தொழிலில் முன்னேற்றம் காணலாம். நிதி முடிவுகளில் அவசரப்பட வேண்டாம்.

**தனுசு**
கல்வி, பயிற்சி மற்றும் அறிவு வளர்ச்சிக்கு ஏற்ற நாள். மனஉற்சாகம் அதிகரிக்கும்.

**மகரம்**
பொறுமையுடன்செயல்பட்டால் நல்ல பலன் கிடைக்கும். குடும்ப பொறுப்புகள் அதிகரிக்கலாம்.

**கும்பம்**
கூட்டாண்மை மற்றும் உறவுகள் சாதகமாக இருக்கும். புதிய வாய்ப்புகளை ஆராயலாம்.

**மீனம்**
வேலைப்பளு அதிகரித்தாலும் அதற்கேற்ற பலன் கிடைக்கலாம். ஓய்வுக்கும் நேரம் ஒதுக்கவும்.



நீலகிரி மாவட்டத்திற்கு அரசு முறை பயணமாக வருகைதந்த மாவட்ட பொறுப்பு மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கமலி அவர்கள் நீலகிரி மாவட்டத்தின்பல்வேறுஅரசுநிகழ்ச்சிகளில்கலந்துகொண்டார்இந்நிகழ்வில் நீலகிரி மாவட்டத்தின் பல்வேறு வளர்ச்சி பணிகள் குறித்து மாவட்ட செயலாளர்பாமாரமேஷ்மற்றும்குன்னூர்கிழக்குநகரசெயலாளர்ஆரோக்கிய தாஸ்,துணைச்செயலாளர் ஆர்மி தாஸ் மற்றும் கழக நிர்வாகிகள் கோரிக்கை வைத்தனர் நீலகிரி மாவட்டத்திற்கு அரசு முறை பயணமாக வருகைதந்த மாவட்ட பொறுப்பு மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கமலி அவர்கள் நீலகிரி மாவட்டத்தின் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார் இந்நிகழ்வில் நீலகிரி மாவட்டத்தின் பல்வேறு வளர்ச்சி பணிகள் குறித்து மாவட்ட செயலாளர் பாமா ரமேஷ் மற்றும் குன்னூர் கிழக்கு நகர செயலாளர் ஆரோக்கிய தாஸ்,துணைச்செயலாளர் ஆர்மி தாஸ் மற்றும் கழக நிர்வாகிகள் கோரிக்கை வைத்தனர்

## என்னிடம் அகந்தை கிடையாது நடிகை ஸ்ரீலீலா



தெலுங்கு சினிமாவின் முன்னணி நடிகையும், அசர வேக ஆட்டக்காரருமான ஸ்ரீலீலா, 'பராசக்தி' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் நுழைந்தார். தற்போது தனுஷ் ஜோடியாக 'ஓம்' படத்தில் நடித்து வருகிறார். இந்த நிலையில் தனக்கு இணையாக ஆட எந்த நடிகரும், நடிகையும் கிடையாது என ஸ்ரீலீலா தெரிவித்ததாக ஒரு தகவல் வெளியானது. இதனை ஸ்ரீலீலா மறுத்துள்ளார். இதுதொடர்பாக அவர் கூறும்போது, 'அகந்தை எப்போதுமே என்னிடம் கிடையாது. நான் அப்படி வளரவும் இல்லை. எல்லோரையும் மதிப்பவள் நான். எனவே இதுபோன்ற தேவையற்ற வதந்திகளை பரப்புவோர் தங்கள் போக்கை மாற்றிக் கொள்ளுங்கள். என்னை பற்றி தெரிந்தவர்களுக்கு என்னை பற்றி புரியும்' என்றார்.

## விக்ரம் பிரபுவின் 26வது திரைப்பட அறிவிப்பு



நடிகர் விக்ரம் பிரபுவின் 26ஆவது திரைப்படம் குறித்து அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகியுள்ளது. இந்தப் படத்தை அறிமுக இயக்குநர் சித்தார்த் இயக்குகிறார். நடிகர் பிரவின் மகனான விக்ரம் பிரபு கும்கி திரைப்படத்தின் மூலம் அறிமுகமானார். பின்னர், இவன் வேற மாதிரி, சிகரம் தொடு, டாணாக்காரன், சிறை ஆகிய வெற்றிப் படங்களில் கவனம் பெற்றார். கடைசியாக வெளியான 'சிறை' திரைப்படம் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. 'சிறை' படத்தின் வெற்றிக்குப் பிறகு, தனது அடுத்தடுத்த படங்களில் தீவிர கவனம் செலுத்தி வந்தார் விக்ரம் பிரபு. பல இயக்குநர்களிடம் கதைகள் கேட்டாலும், எதையும் அதிகாரபூர்வமாக அறிவிக்காமல் இருந்தார். இறுதியாக அறிமுக இயக்குநர் சித்தார்த்தின் படத்தில் நடிக்கவிருப்பதை உறுதி செய்திருக்கிறார். இந்நிலையில், விக்ரம் பிரபு தனது 26ஆவது படத்தை எக்ஸ் பக்கத்தில் அறிவித்துள்ளார். இந்தப் படத்தை ரோமியோ பிக்சர்ஸ் தயாரிக்க, அறிமுக இயக்குநர் சித்தார்த் இயக்குகிறார். இந்தப் படத்தில் யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்கிறார். மீண்டும் யுவன் ஷங்கர் ராஜாவுடன் இணைவது மகிழ்ச்சி அளிப்பதாக விக்ரம் பிரபு கூறியுள்ளார். இதில் விக்ரம் பிரபு உடன் நடிக்கும் நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் தேர்வு மும்முரமாக தொடங்கவுள்ளது. ஒரே கட்டமாக படப்பிடிப்பை முடிக்கவும் திட்டமிட்டுள்ளது படக்குழு. தங்கக் கட்டியில் இருந்து உருகி வழிய அதில் ரத்தத்துடன் கால்தடங்கள் இருக்கும்படியான போஸ்டரை விக்ரம் பிரபு தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். விரைவில் மற்ற தகவல்கள் வெளியாகுமென அந்தப் பதிவில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கீர்த்தி சுரேஷின் "சத்யவான் சாவித்திரி" படத்தின் பர்ஸ்ட் சிங்கிள் வெளியானது




தமிழ் திரையுலகின் முன்னணி நடிகைகளில் ஒருவரான கீர்த்தி சுரேஷ், தற்போது அறிமுக இயக்குநர் பிரவீன் எஸ். விஜய் இயக்கத்தில் உருவாகியுள்ள 'சத்தியவான் சாவித்திரி' திரைப்படத்தில் நடித்துள்ளார். நீதிமன்றத்தை மையமாகக் கொண்டு உருவாகியுள்ளதாக கூறப்படும் இந்தப் படம் ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் படத்தில் இயக்குநரும் நடிகருமான மிஷ்கின் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் பாலசரவணன், பாலாஜி சக்திவேல், ஆர். சுந்தர்ராஜன் உள்ளிட்ட பலர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். சாம் சி.எஸ் இசையமைத்துள்ள இப்படம் விறுவிறுப்பாக உருவாகி, சமீபத்தில் படப்பிடிப்பு பணிகளை நிறைவு செய்தது.

படத்தின் வெளியீட்டு தேதி குறித்த அறிவிப்பை எதிர்பார்த்து ரசிகர்கள் காத்திருந்த நிலையில், படக்குழு அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிட்டது. அதன்படி, 'சத்தியவான் சாவித்திரி' திரைப்படம் வருகிற ஜூலை 24ஆம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

வித்தியாசமான கதைக்களம் மற்றும் கீர்த்தி சுரேஷ் மிஷ்கின் கூட்டணி காரணமாக, இந்தப் படத்தின் மீது ரசிகர்கள் மத்தியில் அதிக எதிர்பார்ப்பு நிலவி வருகிறது. இந்நிலையில், மிஷ்கின், கீர்த்தி சுரேஷ் உள்ளிட்டோர் நடிப்பில் உருவாகியுள்ள 'சத்யவான் சாவித்திரி' படத்தின் முதல் பாடலான 'ரிப்பிப்பீ' வெளியானது.

## "ஓம்" படப்பிடிப்பு: பத்ம பூஷண் விருது வென்ற மம்முட்டியை வரவேற்ற தனுஷ்

ஆக்ஷன் கதைக்களத்தில் உருவாகி வரும் இந்தப் படத்தில் ஸ்ரீலீலா, சாய் பல்லவி ஆகியோர் கதாநாயகிகளாக நடிக்கின்றனர். மேலும், மலையாள திரையுலகின் முன்னணி நடிகர் மம்முட்டி முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். குறிப்பாக, சாய் பல்லவி காவல்துறை அதிகாரி கதாபாத்திரத்தில் நடிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. தற்போது படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. படத்தின் டைட்டிலை படக்குழு அதிகாரப்பூர்வமாக சமீபத்தில் அறிவித்தது. அதன்படி, 'தனுஷ் 55' திரைப்படத்திற்கு 'ஓம்' என்ற டைட்டில் வைக்கப்பட்டது. மேலும், 'ஓம்' திரைப்படம் வருகிற அக்டோபர் 16ஆம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகும் என்றும் படக்குழு அறிவித்துள்ளது. டைட்டில் அறிவிப்புடன் வெளியாகியுள்ள போஸ்டர் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்று, சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. பத்ம பூஷண் விருது வென்ற நடிகர் மம்முட்டிக்கு வாழ்த்து தெரிவித்து தனுஷின் 'ஓம்' படத்தில் அவரது தோற்றத்திற்கான சிறப்பு போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. இந்த நிலையில், 'ஓம்' படத்தின் படப்பிடிப்பில் நடிகர் மம்முட்டி கேக் வெட்ட, நடிகர் தனுஷ் மற்றும் இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமி கைதட்டி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். இப்புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வெளியாகி வைரலாகி வருகின்றன. மலையாள சினிமா மட்டுமல்லாது இந்தியளவில் மிகச்சிறந்த நடிகர் எனப் பெயரெடுத்த மம்முட்டியின் கலை பங்களிப்புக்காக மத்திய அரசின் பத்ம பூஷண் விருதை ஜனாதிபதி திரௌபதி முர்முவிடமிருந்து பெற்றுக்கொண்டார். மம்முட்டிக்கு இந்த விருது கிடைத்தது திரைத்துறையினரிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## 3வது டெஸ்ட்: லாதம் கான்வே சதம்... இங்கிலாந்தை திணறடித்த நியூசிலாந்து



நியூசிலாந்து இங்கிலாந்து மோதும் 3வது டெஸ்ட் போட்டியில் லாதம், கான்வே சதம் அடித்து இங்கிலாந்து பந்துவீச்சாளர்களை திணறடித்தனர்.

இங்கிலாந்து நியூசிலாந்து அணிகள் இடையிலான 3வது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நாட்டிங்காமில் நேற்று தொடங்கியது. 'டாஸ்' வென்ற நியூசிலாந்து முதலில் பேட்டிங் செய்ய முடிவு செய்தது. இதனையடுத்து தொடக்க வீரர்களாக களமிறங்கிய டாம் லாதம் மற்றும் டிவான் கான்வே தொடக்கம் முதலே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

டாம் லாதம் 149 பந்துகளில் தனது 17வது டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய்தார். மறுமுனையில் டிவான் கான்வே, 174 பந்துகளில் தனது 8வது டெஸ்ட் சதத்தை எட்டினார். அப்போது அணி 317 ரன்கள் எடுத்திருந்தபோது டாம் லாதம் 151 ரன்களில் கேட்ச் ஆனார். தொடர்ந்து டிவான் கான்வே 157 ரன்களில் விக்கெட்டை இழந்தார். இதையடுத்து களமிறங்கிய ஹென்றி நிகோல்ஸ் 36(48) ரன்களிலும், ரச்சின் ரவீந்திரா 7 (22) ரன்களிலும் அவுட்டாகினர்.

இதனால் முதல் நாள் ஆட்ட நேர முடிவில், 84.1 ஓவர்களில் நியூசிலாந்து அணி முதல் இன்னிங்சில் 4 விக்கெட் இழப்புக்கு 361 ரன்கள் குவித்துள்ளது.

## உலகக்கோப்பை கால்பந்து: ஜெர்மனிக்கு எதிரான வெற்றியை குடும்பத்துடன் கொண்டாடிய ஈகுவடார் பயிற்சியாளர்



உலகக்கோப்பை கால்பந்து தொடர் அமெரிக்கா, கனடா, மெக்சிகோவில் நடந்து வருகிறது. இதில் இன்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் ஜெர்மனி ஈகுவடார் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் வலிமையான ஜெர்மனி வெற்றிபெறும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், சிறப்பான ஆட்டத்தால் 21 என்ற கோல் கணக்கில் ஜெர்மனியை வீழ்த்தி ஈகுவடார் அபார வெற்றிபெற்றது. இதன் மூலம் ரவுண்ட் ஆப் 32 சுற்றுக்குள் ஈகுவடார் நுழைந்தது.

ஜெர்மனியை வீழ்த்திய மகிழ்ச்சியில் ஈகுவடார் பயிற்சியாளர் செபாஸ்டின் பிகாசி மைதானத்தில் இருந்த தனது குடும்பத்தினரை நோக்கி ஓடிச்சென்றார்.

மைதானத்தில் குடும்பத்தினர் நின்றுகொண்டிருந்த இருக்கை பகுதிக்கு ஏறிச்சென்ற செபாஸ்டின் குடும்பத்தினரை கட்டி அணைத்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். இது தொடர்பான வீடியோ சமூகவலைதளத்தில் வைரகி வருகிறது.

## டி20 கிரிக்கெட்: இந்திய அணியை முதல் முறையாக வீழ்த்தி அயர்லாந்து வெற்றி.!

இந்திய கிரிக்கெட் அணி 2 போட்டி கொண்ட டி20 தொடரில் ஆடுவதற்காக அயர்லாந்துக்கு சென்றுள்ளது. அதன்படி, இந்தியா அயர்லாந்து இடையிலான முதலாவது டி20 போட்டி பெல்பாஸ்ட் நகரில் இன்று நடைபெற்றது.

சூர்யகுமார் யாதவை டி20 அணியின் கேப்டன் பதவியில் இருந்து நீக்கிவிட்டு புதிய கேப்டனாக ஸ்ரேயஸ் அய்யரை நியமித்த பிறகு இந்தியா விளையாடும் முதல் ஆட்டம் இதுவாகும். இந்த போட்டியில் டாஸ் வென்ற இந்திய அணி பந்துவீச்சை தேர்வுசெய்துள்ளது.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த அயர்லாந்து அணிக்கு தொடக்கமே அதிர்ச்சி காத்திருந்தது. டெக்டர் 17 ரன்னிலும், அடயர் 12 ரன்னிலும், ஹாரி டெக்டர் ரன் ஏதும் எடுக்காமல் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இதனால் அந்த அணி 51 ரன்னுக்குள் 4 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

அப்போது லோர்கன் டக்கர் டெலனி இருவரும் இணைந்து அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தியதுடன், அணியை சரிவில் இருந்து மீட்டனர். டக்கர் அரைசதமடித்து ஆட்டமிழந்தார். டெலனி 49 ரன்கள் எடுத்து அவுட்டானார். இவர்களின் அதிரடி ஆட்டத்தால் அயர்லாந்து அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்புக்கு 182 ரன்கள் எடுத்தது.

இந்திய அணி தரப்பில் அதிகபட்சமாக ஹர்ஷித் ராணா 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இதையடுத்து 183 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி பேட்டிங் செய்தது.

தொடக்க ஆட்டக்காரர்களாக சஞ்சு சாம்சனும், அபிஷேக் சர்மா களமிறங்கினர். சாம்சன் 5 ரன்னிலும், கிஷன் 1 ரன்னிலும், கேப்டன்ஸ்ரேயஸ்ஐயர் 3 ரன்னிலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். எனினும் மறுமுனையில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய அபிஷேக்சர்மா, 20 பந்துகளில் அரைசதமடித்தார். அவர் 50 ரன்னில் ஆட்டமிழந்தார். அதன் பிறகு வந்த பேட்ஸ்மேன்கள் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்த தவறினர். அத்துடன், இந்திய அணிக்கு சீரான இடைவேளியில் விக்கெட்டுகள் விழுந்துகொண்டே இருந்தன.

இறுதியில் இந்திய அணி 18.2 ஓவர்களில் 148 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் அயர்லாந்து அணி 34 ரன்கள் வித்தியாசத்தில் இந்திய அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது. அத்துடன், 2 போட்டிகள் கொண்ட தொடரில் 10 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

அயர்லாந்து தரப்பில் மேத்யூ ஹம்ப்ரீஸ் மற்றும் மேத்யூ ஹோலர்ட் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார். டி20 கிரிக்கெட்டில் இந்திய அணியை அயர்லாந்து அணி வீழ்த்துவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. வரலாற்று வெற்றியை பதிவு செய்துள்ளதால் அயர்லாந்து வீரர்கள் உற்சாகமடைந்துள்ளனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.